# மே - 23 - செவ்வாய்
### புனித யோவான் பப்டிஸ்ற் றோசரி

## நான் உங்களிடம் சொல்வது உண்மையே நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள்" (யோவா 16:7)

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 16 : 22 – 34

அக்காலத்தில் பிலிப்பி நகர் மக்கள் திரண்டெழுந்து அவர்களைத் தாக்கினார்கள். நடுவர்கள் அவர்களுடைய மேலுடைகளைக் கிழித்து அவர்களைத் தடியால் அடிக்க ஆணையிட்டார்கள். அவர்களை நன்கு அடித்துச் சிறையில் தள்ளிக்கருத்தாய்க் காவல் செய்யுமாறு சிறைக்காவலர் ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். இவ்வாறு கட்டளை பெற்ற அவர் அவர்களை உட்சிறையில் தள்ளி, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டிவைத்தார். நள்ளிரவில் பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினார். மற்ற கைதிகளோ இதனைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். திடீரென ஒருபெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்தது. உடனே கதவுகள் அனைத்தும் திறந்தன. அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன. சிறைக் காவலர் விழித்தெழுந்து, சிறைக்கூடத்தின் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு, கைதிகள் தப்பி ஓடியிருப்பார்கள் என எண்ணி, வாளை உருவித் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். பவுல் உரத்த குரலில் அவரைக் கூப்பிட்டு, "நீர் உமக்குத் தீங்கு எதுவும் செய்து கொள்ளாதீர் நாங்கள் அனைவரும் இங்கேதான் இருக்கிறோம்" என்றார். சிறைக் காவலர் உடனே ஒரு விளக்கைக் கொண்டுவரச் சொல்லி, விரைந்தோடி வந்து நடுங்கியவாறே பவுல், சீலா ஆகியோரின் காலில் விழுந்தார். அவர்களை வெளியே அழைத்து வந்து, "பெரியோரே, மீட்படைய நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். அதற்க அவர்கள், "ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்" என்றார்கள். பின்பு அவர்கள் ஆண்டவரின் வார்த்தையை அவருக்கும் அவர் வீட்டில் இருந்தோர் அனைவருக்கும் அறிவித்தார்கள். அவ்விரவு நேரத்திலேயே அவர் அவர்களைக் கூட்டிச்சென்று அவர்களின் காயங்களைக் கழுவினார். பின்பு அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினார். கடவுள்மீது நம்பிக்கை கொண்டதால் தம் வீட்டார் அனைவரோடும் சேர்ந்து அவர் பேருவகை அடைந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது வலக்கையால் என்னைக் காப்பாற்றுனின்றீர்

## நற்செய்தி : யோவான் 16 : 5 – 11

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, "இப்போது என்னை அனுப்பியவரிடம் போகிறேன் ஆனால் உங்களுள் எவரும் "நீர் எங்கே போகிறீர்?" என்று என்னிடம் கேட்காமலேயே நான் சொன்னவற்றைக் குறித்து துயரத்தில் மூழ்கியுள்ளீர்கள். நான் உங்களிடம் சொல்வது உண்மையே. நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன். அவர் வந்து பாவம், நிதீ, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக்காட்டுவார். பாவம் பற்றிய அவர்கள் கருத்து தவறானது ஏனெனில் என்னிடம் அவர்கள் நம்பிக்கைக் கொள்ளவில்லை. நீதி பற்றிய அவர்கள் கருத்து தவறானது. நான் தந்தையிடம் செல்கிறேன் நீங்களும் இனி என்னைக் காண மாட்டீர்கள். தீர்ப்பு பற்றிய அவர்கள் கருத்து தவறானது ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுவிட்டான்" என்றார்.

**தியானம்:** மனிதர்களாகிய நாம் பிரிவு என்றால் கலங்குகிறோம். ஒரு பிரிவு மற்றொரு சந்திப்பு என்பதை மறந்து விடுகிறோம். இயேசு தம் சீடர்களோடு இருந்த தருணங்களை விட அவர்களோடு இல்லாத தருணங்களில் தான் அவர்கள் துணிவோடு இயேசுவுக்கு சான்று பகர்ந்தார்கள் என்பதை திருத்தூதர் நூலில் வாசிக்கின்றோம். இயேசு விட்டுச்சென்ற பணி அவரோடு முடங்கிவிடவில்லை. அவர் போய் தூய ஆவியானவரை அனுப்புவதாக வாக்களிக்கின்றார். அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு போன்ற உலகினர் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என உணர்த்துவார். மனித கருத்துக்கள், மனித தீர்ப்புக்கள் சுயநல போக்குடையதாக அவனுக்கு சார்பாகவே அமைந்து விடுகிறது. தூய ஆவியாரின் செயல்பாடுகளோ முற்றிலும் இறை அருள் சார்ந்தது. தூய ஆவியானவரின் செயல்பாடுகள் எம்மிலும் செயலாற்ற எம்மை முழுவதும் இறைவனுக்கு ஒப்புக்கொடுப்போம்.